**පාර්ලිමේන්තු ප්‍රකශන මාලා අංකය: 492**

**ආයතනයේ නම: අමාත්‍ය මණ්ඩල කාර්යාලය**

පාර්ලිමේන්තුවේ රජයේ ගිණුම් පිළිබඳ කාරක සභාව විසින් සභාගත කරන ලද වාර්තා සම්බන්ධයෙන් ස්ථාවර නියෝග අංක 119(4) යටතේ ගරු ආයතන භාර අමාත්‍යවරයාගේ නිරීක්ෂණ හා ගනු ලබන පියවර පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කිරීම.

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் :**492**

நிறுவனத்தின் பெயர் : **அமைச்சரவை அலுவலகம்**

பாராளுமன்றத்தின் அரச கணக்குக் குழுவினால் முன்வைக்கப்பட்ட அறிக்கை தொடர்பாக நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் நிறுவனங்களிற்குப் பொறுப்பான கௌரவ அமைச்சரின் அவதானிப்புக்களும் மற்றும் அது தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கைகளும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்

**Parliamentary Series No:492**

**Name of the institution: Office of the Cabinet of Ministers**

Submission of observations of the Hon. Minister in charge of the institutions and steps taken with regard to the reports tabled by the Committee on Public Accounts in terms of Standing Order No. 119(4)

படிவம் : (இலக்கம் 01)

பாராளுமன்ற தொடர் இலக்கம் : 492

நிறுவனத்தின் பெயர் : அமைச்சரவை அலுவலகம்

| அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவினால் இனங்காணப்பட்ட குறைபாடுகள் | | குறைபாடுகளைத் தவிர்ப்பதற்கு நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் / தற்போதைய நிலைமை |
|---|---|---|
| பொருட் கணக்கெடுப்பினை முற்றாக்கி உரிய திகதியில் குறித்த அறிக்கைகளை கணக்காய் விற்காக முன்வைக்கப்படாமை. | | 2023 ஆம் ஆண்டிற்குரிய பொருட் கணக்கெடுப்பினை நடாத்துவதற்கு 2023-12-11 ஆம் திகதியன்று முறையாக பொருட் கணக்கெடுப்பு குழுவானது நியமிக்கப்பட்டது. குடியரசு கட்டிடத்தில் தாபிக்கப்பட்டிருந்த அமைச்சரவை அலுவலகம் 2022 ஆம் ஆண்டில் லொயிட்ஸ் கட்டிடத்தில் தாபிக்கப்பட்டதன் காரணமாக அலுவலக பணிகள் உட்பட ஒவ்வொரு பிரிவுகளையும் மீள தாபித்ததன் காரணமாக பிரிவுகளுக்கான பொருட் பதிவேடானது மீண்டும் இற்றைப்படுத்தப்படவேண்டி நேர்ந்தது. 2022 ஆம் ஆண்டில் பிரிவுகளுக்கான பொருட் பதிவேட்டினை இற்றைப்படுத்தும் போது காணப்பட்ட பிழைகளை சீர்செய்து குறித்த பணிகள் பூர்த்தி செய்யப்படும் வரை பொருட் கணக்கெடுப்பு பணிகளை பூர்த்தி செய்ய முடியாமற்போனது. ஆயினும், பொருட் கணக்கெடுப்பு பணிகளாவன பூர்த்தி செய்யப்பட்டு 2024-06-19 ஆம் திகதியன்றில் சகல பராதீனப்படுத்தும் பணிகளையும் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. |
| பொருட் கணக்கெடுப்பின் போது கண்டுபிடிக்கப்பட்ட மேலதிகம், பற்றாக்குறைகள் பற்றிய சிபாரிசு களை செயல்படுத்த தவறியமை | | குறைபாடுகள் மற்றும் மேலதிகம் என்பன தொடர்பிலான சிபாரிசுகள் நடைமுறைப்படுத்தப்பட்டதோடு, 2023 ஆம் ஆண்டிற்கான பராதீனப்படுத்தும் பணிகள் சம்பந்தமான அறிக்கைகளும் 2024-08-13 ஆம் திகதியன்று கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. |
| அனைத்து வாகனங்களிலும் அரசாங்க இலட்சினை பொறிக்கப் பட்டிருக்காமை | | அமைச்சரவை அலுவலகத்தின் குழு அலுவலகப் பணிகளுக்காக முழுநேர அடிப்படையில் ஈடுபடுத்தப் பட்டுள்ள சகல வாகனங்களிலும் 26/92 ஆம் இலக்கமுடைய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையிலுள்ள அறிவுறுத்தலின் பிரகாரம் தற்போது அரசாங்க இலட்சினையை பொறிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| உள்ளக கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டங்கள் தயாரிக்கப் பட்டிருக்காமை | | அமைச்சரவை அலுவலகம் 2021-12-31 ஆம் திகதி வரை தாபிக்கப்பட்டிருந்த குடியரசு கட்டிடத்தில் மட்டுப்படுத்தப் பட்ட இடவசதியே காணப்பட்டது. ஆதலால், உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தர் ஒருவரை இணைத்து குறித்த உத்தியோகத்தருக்கு போதுமான அளவு அலுவலக இடவசதியினை வழங்குவதும் அதேபோன்று கணக்காய்வு பணியாட்டொகுதியினருக்கு தேவையான இடவசதியினை வழங்குவதும் பிரச்சினையாக இருந்தது. அமைச்சரவை அலுவலகம் கொழும்பு-01, சேர் பாரோன் ஜயதிலக்க மாவத்தையில் அமைந்துள்ள 'லொயிட்ஸ்' கட்டிடத்தில் தாபிக்கப்பட்டதன் பின்னர் உள்ளக கணக்காய்வாளர் பதவிக்கு திறைசேரியின் உத்தியோகத்தர் ஒருவர் பதில் கடமையாற்றும் அடிப்படையில் 2023-09-25 ஆம் திகதியிலிருந்து நியமிக்கப்பட்டார். அதன் பின்னர், உள்ளக கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டமானது தயாரிக்கப்பட்டு கணக்காய்வாளர் நாயகத்திற்கு முன்வைக்கப்பட்டது. தற்போது அமைச்சரவை அலுவலகத்தில் உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தர் ஒருவர் நிரந்தரமாக இணைக்கப்பட்டுள்ளார். |
| கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்கள் நடாத்தப்படாமை | | தற்போது உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தர் ஒருவர் நிரந்தர அடிப்படையில் நியமிக்கப்பட்டுள்ளதோடு, உரிய முறையில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் |

| | | |
|---|---|---|
| | | கூட்டங்களை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| மொத்த பதவியணியினருக்காக செயலாற்றுகை ஒப்பந்தங்கள் தயாரிக்கப்பட்டிருக்காமை. | | இந்த அலுவலகத்தின் பதவிநிலைத்தர உத்தியோகத்தர்கள் அனைவரும் பஞ்சாங்க ஆண்டின் ஆரம்பத்தில் 07/98 ஆம் 08/98 ஆம் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளிலுள்ள அறிவுறுத்தல்களின் பிரகாரம் குறித்த ஆண்டிற்குரிய பணிகள் சம்பந்தமான செயலாற்றுகை திட்டங்களை சமர்ப்பிக்க வேண்டும். குறித்த செயலாற்றுகை திட்டத்தினுள் உத்தியோகத்தர்களினால் உரிய ஆண்டினுள் பொறுப்புகூறும் துறைகள், பூர்த்தி செய்யப்பட வேண்டிய பணிகள் மற்றும் அதற்குரிய செயற்திறன் குறிக்காட்டிகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.<br><br>குறித்த செயலாற்றுகை திட்டங்கள் சார்பில் உரிய பதவிநிலைதர உத்தியோகத்தர், மேற்பார்வை உத்தியோகத்தர் மற்றும் அமைச்சரவைச் செயலாளர் அல்லது அவரினால் அதிகாரம் கையளிக்கப்பட்ட சிரேட்ட உத்தியோகத்தர் கைச்சாத்திடுவதோடு, அதற்கிணங்க அது வருடாந்தம் நிறைவேற்றப்பட வேண்டிய கடமை பொறுப்புக்கள் சம்பந்தமான ஒப்பந்தமொன்றாக செயற்படும். அதேபோன்று குறித்த திட்டத்திற்குரிய செயற்திறன் அரை ஆண்டு ரீதியிலும் ஆண்டு ரீதியிலும் மதிப்பீட்டிற்கும் ஆய்வுக்கும் உட்படுத்தப்படும்.<br><br>2018-01-24 ஆம் திகதியிடப்பட்டதும் 02/2018 ஆம் இலக்கத்தைக் கொண்டதுமான அரசாங்க நிருவாக சுற்றறிக்கையின் 1 ஆம் பந்தியின் மூலம் விதித்துரைக்கப்பட்டுள்ள வருடாந்த செயலாற்றுகை ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் தேவை 2023-11-30 ஆம் திகதியிடப்பட்டதும் 02/2018(I) ஆம் இலக்கத்தைக் கொண்டதுமான அரசாங்க நிருவாக சுற்றறிக்கையின் 3 ஆம் பந்தியின் மூலம் திருத்தப்பட்டுள்ளதோடு, இந்த திருத்தத்திற்கு அமைவாக செயலாற்றுகை ஒப்பந்தத்தினை தயாரிக்க வேண்டிய தேவை இனிமேலும் தேவைப்படாமாட்டாதென்பதையும் அவதானிக்கின்றேன். |
| இனங்காணப்பட்ட நிலைபேறுடைய குறியிலக்குகளை அடைவதை அளவிடுவதற்காக செயலாற்றுகை குறியிலக்குகள் விதித்துரைக்கப் பட்டிருக்கவில்லை. இனங்காணப் பட்ட நிலைபேறுடைய அபிவிருத்தி குறியிலக்குகளை நடைமுறைப் படுத்தும் முன்னேற்றத்தினை அளவிடுவதற்கான சுட்டெண்கள் விதித்துரைக்கப்பட்டிருக்காமை | | அமைச்சரவை அலுவலகத்திற்கு கையளிக்கப்பட்டுள்ள பணிகளை கவனத்திற்கு கொள்ளும்போது, நிலைபேறுடைய அபிவிருத்தி குறியிலக்குகள் இந்த அலுவலகத்தின் பணிகளுடன் நேரடியாக தொடர்புபடுத்த முடியாது. அரசாங்க பணிகளை நிர்வகிக்கும் மற்றும் நெறிப்படுத்து வதற்குமான சகல கொள்கை ரீதியிலுமான தீர்மானங்களை எடுப்பதற்குத் தேவையான ஒத்தாசையினை வழங்குவது இந்த அலுவலகத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அதேபோன்று பல்வேறுபட்ட அமைச்சுக் களினால் கொள்கை ரீதியிலான அங்கீகாரங்களைப் பெற்றுக் கொள்வதற்கு அமைச்சரவை விஞ்ஞாபனங்களைச் சமர்ப்பிக்கும்போது இந்த நிலைபேறுடைய நோக்கங்கள் மற்றும் குறியிலக்குகளை அடைவதற்கு இயலுமாகும் வகையில் குறித்த கொள்கைகளை நடைமுறைப்படுத்தும் பொறுப்புக்கள் இந்த அமைச்சுக்களுக்கு கையளிக்கப்பட்டுள்ளமையை அவதானிக்கின்றேன். |
| திட்டமிடப்பட்ட பயிற்சி வாய்ப்பு களிலிருந்து வழங்கப்பட்டிருந்த பயிற்சி வாய்ப்புகள் 50 சதவீதத்தை விட குறைவாக உள்ளமை. | | நிறுவன ரீதியலான மனிதவள அபிவிருத்திக்குரிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் சகல சந்தர்ப்பங்களிலும் உத்தியோகத்தர்களை பங்குபெறச் செய்விப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. ஆயினும், இந்த அலுவலகத்திற்கு கையளிக்கப்பட்டுள்ள பிரதான பணியான வாராந்த அமைச்சரவைக் கூட்டங்களுக்குரிய பணிகளை மிகக் குறுகிய காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருப்பதால் இந்தப் பணிகளுக்கு பாதிப்பு ஏற்படாத |

| | | |
|---|---|---|
| | | விதத்தில் பதவியணியினரை பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களுக்கு அனுப்பவேண்டியுள்ளது. முக்கியமாக கடந்த காலப்பகுதியினுள் கட்டணம் அறவிடாது நடாத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களுக்கு உத்தியோகத்தர்கள் அதிகமாக அனுப்பப்பட்டதன் காரணமாக ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடுகளின் பயன்பாடு மட்டுப்படுத்தப்பட்டதோடு, தற்போது பயிற்சி செலவு விடயத்திற்காக ஒதுக்கிக் கொள்ளப்படும் நிதி ஏற்பாட்டின் அளவினை கணிசமான அளவு குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஆதலால், எதிர்காலத்தில் தேவைக்கு ஏற்ப மொத்த பதவியணியினருக்கும் பயிற்சிகளைப் பெற்றுக் கொள்வதற்கு இயலுமாகும் வகையில் பயிற்சி வாய்ப்புகளை வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. |


டபிள்யு.எம்.டி.ஜே.பெர்னாண்டோ
அமைச்சரவைச் செயலாளர்

**W. M. D. J. FERNANDO**
Secretary to the Cabinet of Ministers
Office of the Cabinet of Ministers
Lloyd's Building
Sir Baron Jayathilaka Mawatha
**Colombo 01.**